மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த வழக்குகள் என்ற விவரம் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது போல் ராஜமன்னார் குழுவின் அறிக்கையில் இதைப் பற்றி வாதிக்கப் பட்டு அந்தச் சட்டங்களின்படி பிரச்சினை வரும்போது தனி முக்கியத்துவம் கொடுத்து உடனடியாகத் தீர்வு காண்பது நல்லது என்ற யோசனையை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

மதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு அறைகள்

* 422 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை நீதிமன்றத்தில், வழக்கறிஞர்களுக்குத் தனி அறைகள் (chambers) கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். மதுரை நீதி மன்றத்தில் ரூபாய் 9.30 லட்சம் மதிப்பீடுச் செலவில், 50 வழக்கறிஞர் அறை கள் கட்டுவதற்கான செயற்குறிப்பை சென்னை உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. அந்தச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : மதுரையில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியைத் துவக்குவதாக அரசு உத்தேசித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்போது துவங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெற்ற பிறகுதான் அதைப் பற்றி முடிவு எடுக் கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் வழக்கறிஞர்களுக்காக கட்டப்படக்கூடிய சேம்பர்கள் எத்தனை கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டப்படுவதாக முடிவு எடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஆலோசனையை உயர்நீதிமன்றம் வைத்திருக்கிறது. 50 வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டலாம் என்று யோசனை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When advocates are put up in those chambers, will the Government think of giving them at concessional rates?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற அறைகளை நிறைய சம்பாதிக்கிற வழக்கறிஞர்கள்தான் எடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்களைப் பொறுத்தவரை ஏராளமாக சம்பாதிப்பது எனக்குத் தெரியும்.

1971 டிசம்பர் 15]

Thirumathi T. N. ANANDANAYAKI : Sir, is the Hon. Minister giving any information to the Income-tax Department, I would like to know?

திரு. ஜே. ஜேம்ஸ் : மதுரையில் வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுப்பது போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற நீதிமன்றங்களில் பணியாற்றுகின்ற வழக்கறிஞர்களுக்கு அறைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களுக்குப் புதிதாக நீதிமன்ற கட்டடங்கள் கட்டும் போது அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

வாணியம்பாடிக்கு மாவட்ட முன்சீப் கோர்ட்

* 423 வின—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடியில் ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை

* 424 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை எப்போது தனது உற்பத்திப் பணியைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காஞ்சிபுரத்திலுள்ள சரிகைத் தொழிற்சாலை தனது உற்பத்திப் பணியை 1972 பிற்பகுதியில் தொடங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. அ. தியாகராாசன் : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலை அரசுத் துறையிலா அல்லது தனியார் துறையிலா, எப்படி அமைக்கப்படும், அதற்கு மூலதனம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சுமார் ரூ. 25 லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைக்கு இதை அரசுத் துறையில் ஆரம்பிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சரிகைத் தொழிற்சாலையில் நெசவுக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை அளிக்க முன் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கருத்து பரிசீலிக்கப்படலாம்.